முதல்வர் மு.க.ஸ்டாலினின் கனவுத் திட்டமான

# ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் 25,888 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு!

## ஆண்டுக்கு ரூ.8 லட்சம் வரை சம்பளம்: ‘தி இந்து’ நாளேடு புகழாரம்!

சென்னை, ஜூலை 2 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் 25,888 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ரூ.8 லட்சம் வரை சம்பளம் கிடைக்கும் வண்ணம் வேலை கிடைத்துள்ளது.

இதுகுறித்து ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டில் நேற்று (1.7.2024) செய்தி வெளியாகி உள்ளது.

“நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 25,000க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலை கிடைக்கிறது என்று ‘தி இந்து’ நாளிதழில் வெளியான செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓலா எலக்ட்ரிக் பாலிடெக்னிக் மாணவர்களை எலக்ட்ரிக் வாகன ஆலைகளில் சேரும் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு 2 லட்சம் முதல் 8 லட்சம் வரை சம்பளம் வழங்குவதாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக தரவுகள் காட்டுகின்றன என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மொத்தம் 25,888 மாணவர்கள், மாநில அரசின் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம், ஜூன் 18, 2024 நிலவரப்படி பல்வேறு துறைகளில் வேலை பெற்றுள்ளனர்.

“இந்தத் திட்டத்தின் கீழ், பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் லாபகரமான வேலைகளைப் பெறுவதற்கு அரசாங்கம் உதவுகிறது. இதுவரை 252 கல்லூரிகள் வேலை வாய்ப்பு இயக்கத்தில் பங்கேற்றுள்ளன. வேலை வாய்ப்புகள் இன்னும் நடந்து வருவதாகவும், சுமார் 58,000 மாணவர்கள் தங்கள் படிப்பின் இறுதி ஆண்டில் படித்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு, ஓலா எலக்ட்ரிக் தனது எலக்ட்ரிக் வாகன (EV) ஆலைகளுக்கு பாலிடெக்னிக் மாணவர்களைச் சேர்க்கிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) படி, நிறுவனங்கள் அதன் ஆலைகளுக்கு




புதிய விண்ணப்பதாரர்களை நியமிக்க திட்டமிட்டுள்ளது. தற்போது, தொகுக்கப்பட்ட வளாக வேலை வாய்ப்பு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன, தற்போது, 120க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள், அசெம்பிளி லைன்கள், லாஜிஸ்டிக்ஸ், ஆபரேஷன்ஸ் மற்றும் ஸ்டோர்ஸ் போன்றவற்றில், நுழைவு நிலை நிலைகளில் பணியமர்த்தப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அசன்ட்சர், அமேசான், அசோக் லேலண்டு, கேட்டர் பில்லர் இந்தியா, டைகின், டெல் ஃபி, டி.வி.எஸ். பி.ஓ.எய்.சி.எச்., எய்ச்சர், போர்டு, எச்.சி.எல்., டெக் மற்றும் எல் அண்டு ட்டி உள்ளிட்ட நிறுவனங்களும் பாலிடெக்னிக் மாணவர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளன. சில வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் பதிவு செய்யப்பட்டன.

இந்த மாணவர்களுக்கான சம்பளப் பேக்கேஜ்கள் வருடத்திற்கு 2 லட்சம் முதல் 8 லட்சம் வரை, நோக்கியா வழங்குகிறது.

ஜே.இன்னசென்ட் திவ்யா, (மேலாண் இயக்குநர்) இதுபற்றி கூறியதாவது:-

தொழிற்சாலைகள், கடை நிலை நிபுணத்துவம் கொண்ட பாலிடெக்னிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களை விரும்புகின்றன.

“இந்த ஆண்டு, பொறியியல் கல்லூரிகளில் எங்கள் பணியமர்த்தலைக் குறைத்து, அதிக பாலிடெக்னிக் மாணவர்களை தேர்வு செய்தோம். இந்த மாணவர்கள் அதிக நடைமுறை அமர்வுகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள், மேலும் முதல் நாளிலிருந்தே வேலை தளத்தில் நிறுத்தப்படலாம். இது பயிற்சி செலவைக் குறைக்க உதவுகிறது...” என்று குறிப்பிட்டார். இதில் பங்கேற்ற நிறுவனங்களில் ஒன்று, கூறியது:

இந்தத் திட்டத்தின் கீழ், பாலிடெக்னிக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு டிஜிட்டல் திறன்கள் (மெய்நிகர்), கட்டிடத் தகவல் மாடலிங், AR மற்றும் VR ஐப் பயன்படுத்தி தொழில்துறை மெட்டாவேர்ஸ், இண்டஸ்ட்ரி 4.0 மற்றும் பிரிண்டட் சர்க்யூட் போர்டு (பிசிபி) வடிவமைப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இவ்வாறு ‘தி இந்து’ நாளிதழில் செய்திக் கட்டுரை வெளியாகி உள்ளது.

இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் குரல்கொடுத்த

# மாபெரும் அரசியல் ஆளுமை சம்பந்தன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

**சென்னை, ஜூலை 2-**

**“இலங்கைத் தமிழர்களின் உரிமைகளுக்காக தன் வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமை சம்பந்தன் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**



இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் அரசியல் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஐயா அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

தமிழர்கள் மட்டுமல்லாது சிங்களவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் மரியாதையைப் பெற்ற அரும்பெரும் தலைவராகத் திகழ்ந்தவர் சம்பந்தன் அவர்கள். இறுதி மூச்சு வரையிலும் தமிழ்மக்களின் நலனுக்காகவே சிந்தித்தார், செயல்பட்டார். நாடாளுமன்றவாதியாக அரைநூற்றாண்டு காலம் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இலங்கையின் அரசியலில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தி வந்தன. இலங்கைத் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுக்காக மிக நீண்டகாலம் அறவழியில் சம்பந்தன் அவர்கள் போராடி வந்தார்.

### தலைவர் கலைஞரின் நண்பர்!

இந்தியாவோடும் தமிழ்நாட்டுடனும் மிகச் சிறந்த நட்புறவை சம்பந்தன் அவர்கள் பேணி வந்தார். தலைவர் கலைஞர் அவர்களின் நண்பராகவும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாகவும் பல முறை அவரைச் சந்தித்து மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்கள் குறித்து சம்பந்தன் ஆலோசித்துள்ளார்.

2015-ஆம் ஆண்டில் சம்பந்தன் அவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, “எனது அருமை நண்பர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுக்குப் பிறகு, தமிழர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக ஆகியுள்ளது மகிழ்ச்சிக்குரியது. இலங்கைத் தமிழர்கள் அனைவரும், தங்கள் வாழ்வில் விடிவுகாலம் ஏற்படாதா என்று நீண்ட நாட்களாக எதிர்நோக்கியிருக்கும் வேளையில், எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஓர் நம்பிக்கையைத் தருகிறது” என்று முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

2016-ஆம் ஆண்டு 13-ஆவது முறையாகத் தலைவர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சம்பந்தன் அவர்களும், “இதுவொரு சாதாரண சாதனையல்ல. எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய ஒரு சாதனையாகும். இலங்கைத் தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெறுவதற்கு உங்களுடைய ஆக்கப்பூர்வமான பங்களிப்பு தொடர வேண்டும்” என வாழ்த்து தெரிவித்திருந்தார்.

### தமிழ்ச் சொந்தங்களுக்கு பேரிழப்பு!

ஈழத்தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோருக்குப் பிறகு இலங்கை அரசியலில் மிகவும் போற்றத்தக்க தலைவராக விளங்கிய சம்பந்தன் அவர்களின் இடத்தை இலங்கை அரசியலில் எவராலும் எளிதில் ஈடுசெய்ய முடியாதது. அவரது மறைவு இலங்கைத் தமிழ் மக்கள் மட்டுமின்றி, உலகெங்கிலும் வாழும் தமிழ்ச் சொந்தங்களுக்கும் பேரிழப்பாகும்.

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாளெல்லாம் குரல் கொடுத்த மாபெரும் அரசியல் ஆளுமையான சம்பந்தன் அவர்களை இழந்து தவிக்கும் அவரது அமைப்பினருக்கும் இலங்கைத் தமிழ் உறவுகளுக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

மதுரை தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில்

தன்னலமற்ற தியாக தொண்டாற்றி - ஓய்வு பெற்றுள்ள

# டாக்டர் காந்திமதி நாதனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

## தமது இல்லத்திற்கே அழைத்து நேரில் பாராட்டுத் தெரிவித்தார்!

*சென்னை, ஜூலை 2-*

*மதுரை தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் நோயாளிகளை உறவினர்கள் போல் நேசித்து மருத்துவமனைக்கும், மருத்துவப் பணிகளுக்கும் பெருமைகள் தேடித்தந்து ஓய்வு பெற்றுள்ள டாக்டர் காந்திமதி நாதன் அவர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (1.7.2024) இல்லத்திற்கே அழைத்து நேரில் பாராட்டி வாழ்த்துகள் தெரிவித்தார்.*

*மதுரை அருகே தோப்பூரில் 1960-ஆம் ஆண்டு பிப்ரவரி 12ஆம் தேதி அன்றைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் அரசு காசநோய் மற்றும் பிற தொற்று நோய்களுக்காக தனித்தன்மை வாய்ந்த நெஞ்சக நோய் மருத்துவமனை திறக்கப்பட்டது. 115 ஏக்கரில் பரந்து விரிந்த நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த மருத்துவமனையில் காசநோயாளிகள் பிற தொற்று நோயாளிகள் நோய் முற்றிய நிலையில் வீட்டில் வைத்து பராமரிக்க முடியாத நிலையில் உறவினர்களால் கைவிடப்பட்டவர்கள் இந்த மருத்துவமனையில் கொண்டு வந்து விடப்படுவார்கள்.*

*2013-ஆம் ஆண்டின் இந்த மருத்துவமனையின் நிர்வாக அலுவலராக நியமிக்கப்பட்டவர் டாக்டர் காந்திமதிநாதன் அவர்கள். டாக்டர் காந்திமதி நாதன் அவர்களின் தன்னலமற்ற தியாக மனப்பான்மையுடன் கூடிய மருத்துவத் தொண்டுகளால் இந்த மருத்துவமனை மிகச்சிறந்த மருத்துவமனையாக வளர்ந்துள்ளது.*

*எய்ம்ஸ் மருத்துவமனைக்கே இங்கு நிர்வாக அலுவலகம் அமையும் அளவுக்கு இந்த மருத்துவமனை உயர்ந்து சிறந்துள்ளது. இந்த மருத்துவமனை வளாகத்தில் நந்தவனம் போல் திரும்பிய பக்கம் எல்லாம் பசுமை புல்வெளிகள் சூரிய வெளிச்சமே படாத அளவுக்கு அடர்த்தியாக நிழல் தரும் மரங்கள் நிறைந்துள்ளன.*

*மருத்துவர் காந்திமதிநாதன் அவர்களின் கடுமையான உழைப்பின் மூலம் இந்த மருத்துவமனையில் இன்வெர்ட்டர்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், எப்.எம். ரேடியோ வசதி, நூலகம், பொழுதுபோக்கும் இடம், சதுரங்கம், கேரம் பலகை, இறகுப் பந்து விளையாட்டு அரங்கம், பொழுதுபோக்குவதற்கு டி.வி., நடைபயிற்சி பூங்கா, தியான மையம், யோகா அறை போன்றவை அமைந்து நீண்டகாலம் தங்கி காசநோய் சிகிச்சைக்காக மருத்துவம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளவர்கள் அனைவரும் கவலையின்றி மருத்துவம் செய்துகொள்வதற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன.*

*டாக்டர் காந்திமதி நாதன் அவர்களின் தீவிர கவனத்தின் விளைவாக இம்மருத்துவமனையில் சொற்பொழிவாளர்கள், மனோதத்துவ நிபுணர்கள் அழைத்துவரப்பட்டு நோயாளிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. சிகிச்சைபெறும் ஒவ்வொரு நோயாளியின் பெயரையும் சொல்லி அழைக்கும் அளவுக்கு டாக்டர் காந்திமதிநாதன் நோயாளிகளின் மீது சிறப்பான கவனம் செலுத்தி வந்துள்ளார்.*

*டாக்டர் காந்திமதிநாதன் அவர்கள் இந்த மருத்துவமனையை தனது வீடு போலவும், நோயாளிகளை தங்கள் குடும்ப உறுப்பினர்கள் போலவும் நேசித்து பயனாளிகளின் நோய் விரைந்து குணமடைய காரணமாக இருந்துள்ளார். இந்த தோப்பூர் காசநோய் மருத்துவமனை டாக்டர் காந்திமதிநாதன் அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க பணிகளால் தற்போது அதிநவீன மருத்துவ வசதிகளுடன் தமிழகத்தின் தலைசிறந்த நெஞ்சக மருத்துவமனையாக உருவெடுத்து ஒரு சோலை வனமாக காட்சியளிக்கிறது. தோப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனைத்து வகையிலும் பெருமைகளை உருவாக்கித் தந்துள்ள டாக்டர் காந்திமதிநாதன் அவர்கள் 30.6.2024 அன்று அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், டாக்டர் காந்திமதிநாதன் அவர்களின் தியாகத் திருத்தொண்டுகளால் தோப்பூர் காசநோய் மருத்துவமனை சிறந்து விளங்குவது அறிந்து பெரிதும் மகிழ்ந்து டாக்டர் காந்திமதிநாதன் அவர்களுக்கு அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் இல்லத்திற்கு டாக்டர் காந்திமதிநாதன் அவர்கள் தமது குடும்பத்தாருடன் வருகைதந்து முதலமைச்சர் அவர்களை நேற்று (1.7.2024) நேரில் சந்தித்தார்.*

*முதலமைச்சர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு டாக்டர் காந்திமதிநாதன் அவர்களை வரவேற்று, தோப்பூர் காசநோய் மருத்துவமனையில் பணியாற்றியுள்ள காலத்தில் நோயாளிகளை நேசித்து ஆற்றியுள்ள மனிதநேயம் சிறக்கும் மகத்தான தொண்டுகளைப் போற்றி, பாராட்டி, வாழ்த்துத் தெரிவித்துள்ளார்கள்.*

*இந்நிகழ்வின் போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் உடனிருந்தனர்.*

*நேற்று (ஜூலை 1) உலக மருத்துவர் தினம் கடைப்பிடிக்கப்படுவதால் மருத்துவத் துறையில் சிறந்த தொண்டுகள் புரிந்துள்ள மருத்துவர்களுக்கான விருதுகள் வழங்கும் விழாவில் டாக்டர் காந்திமதி நாதன் அவர்களும் விருது வழங்கிச் சிறப்பிக்கப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.*

விக்கிரவாண்டி தொகுதியில்

# கழக வேட்பாளர் சிவாவை ஆதரித்து பிரச்சாரம்!

## தா.உதயசூரியன் - ஆ.அங்கையற்கண்ணி வாக்கு சேகரித்தனர்!

*விழுப்புரம், ஜூலை 2 -*

*பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனைப்படி, விழுப்புரம் மாவட்டம் விக்கிர வாண்டி இடைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆதரவு பெற்ற கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, காணை வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கக்கனூர் ஊராட்சியில் பாகம் எண் 52, 53, 54, 55 ஆகிய பகுதிகளில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினருமான தா உதயசூரியன், மாநில மகளிரணி துணைச் செயலாளர் ஆ.அங்கையற்கண்ணி மற்றும் கூட்டணி கட்சிகளைச் சார்ந்த நிர்வாகிகளும் வீதி வீதியாக வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.*

## வலைதளங்களில் வலம் வருவது!

“உத்தம நண்பர் விவேகானந்தர் தங்கள் கோத்திரம் என்ன என்று வினா எழுப்பினார்.வேறு ஒரு தினமாகில், வினாவினைக் கேட்ட நான் வெகுண்டிருப்பேன்.உறவென விருந்துக்கு வந்த அந்த உயர்ந்த நண்பரிடம் நான் மெல்லிய குரலில்,எனக்கும் கோத்திரத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சேர்ந்தவன் நான்,என ஆத்திரமின்றிக் கோத்திரக் கேள்விக்கு விடையளித்தேன்”

-பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரனார்




உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில்

# ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் 25,000 பாலிடெக்னிக் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் மகிழ்ச்சி!

**சென்னை, ஜூலை 2-**

**“நான் முதல்வன்” திட்டத்தின் மூலம் 25,000க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் மகிழ்ச்சியை தெரிவித்துள்ளார்.**



Over 25,000 polytechnic students get jobs through *Naan Mudhalvan* scheme

Ola Electric is recruiting polytechnic students for electric vehicle plants; T.N. Skill Development Corporation data show that salary packages range from ₹2 lakh per annum to ₹8 lakh per annum

Sangeetha Kandavel
CHENNAI



இதுகுறித்து முதல்வரின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

மனதுக்கு இதமான இந்தச் செய்தியைப் பகிர்ந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன்.

“நான் முதல்வன்” திட்டத்தின் மூலமாக 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இதனைக் கண்டு என் நெஞ்சம் பெருமிதத்தால் நிறைகிறது. நமது திராவிட மாடல் அரசு மெய்யாகவே நமது இளைஞர்களின் கனவுகளை நனவாக்கி வருகிறது.

இத்தகைய வாய்ப்புகளை இறுகப் பற்றிக்கொண்டு, தத்தமது துறைகளில் மென்மேலும் புதிய உயரங்களை அடையுங்கள்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.